**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : |
| Preliminary Register : | | Case No. | : **S.C.19/2022** |
| Sessions : | | | |
| | | Prosecution | : **P.W. 8** |
| Deposition of witness for : | | Defence | : **D.W.** |
| | | Court | : **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | முருகேசன் | **S/o.** | அழகப்பன் |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரியம்மாபாளையத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். வழக்கில் இறந்துபோன கருப்பையாவை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் இறந்துபோன கருப்பயைாவின் மகனாவர். கருப்பையாவின் உடலை சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் எடுத்துசெல்லும்போது நான் போய் வேடிக்கை பார்த்தேன். மருத்துவமனைக்கு செல்லவில்லை. கருப்பயைா எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். நான் வேடிக்கை பார்த்தபோது போலிசார் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். பிரேத விசாரணையில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கருப்பயையாவின் வீடு கரம்பியம் கிராம ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். கருப்பயையாவிற்கும் அவரது மகனிற்கும் சொத்து சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது. நானும், ஊர் முக்கியஸ்தர்களும் சேர்ந்து ஏற்கனவே இது சம்மந்தமாக பஞ்சாயத்து பேசினோம் என்றால்சரியல்ல. கருப்பயையாவின் தம்பி மீது எதிரி கோபமாக இருந்தாரா என்று எனக்கு தெரியாது. 22.01.2021ம் தேதி இரவில் கருப்பயையாவிற்கும், எதிரிக்கும் தகராறு நடந்தது என்றும், அப்போது கருப்பயையாவை எதிரி கத்தியால் குத்திவிட்டார் என்று நான் கேள்விபட்டேன் என்றும், அவ்வாறே போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது தடுக்கப்போன பழனிசாமி எதிரி குத்திவிட்டார் என்று நான் கேள்விபட்டேன் என்றும், தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 23.01.2021 ம் தேதி காலை 09.00 மணியளவில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்து கருப்பயையாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது நான் உடன் இருந்து சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.